[10th September 1960

SRI K. R. NALLASIVAM: இந்த வருஷத்திலே மழையில்லாத காரணத்தால் நீர்க்கசிவு அனேகமாக ஆங்காங்கே நின்றுவிட்டது. இரண்டு மூன்று வருஷங்கள் ஒழுங்காக நடக்கிறதா என்று கணக்கு எடுத்ததின் பின்னால் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு யோசிக்குமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: பேப்பரிலே குறிப்பிடப்பட்டிருக்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

SRI V. S. MANIKKASUNDARAM: இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிற திட்டமல்லாமல் வேறு திட்டங்களும் பரிசீலனையில் இருக்கிறதா? எந்தெந்த திட்டங்கள் பரிசீலனையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU: மற்ற திட்டங்கள் எடுத்துக்கொள்வதினால் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டிருக்கிற சில திட்டங்கள் பாதிக்கப்படுமா என்று பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

Co-operation

* 608 Q.—SRI N. K. PALANISAMY: SRI A. VEDARATHNAM: } Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Centre has advised this Government to introduce the study of co-operation in Primary and Secondary Schools; and

(*b*) if so, the steps taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The syllabuses framed for study of Tamil and Social Studies in schools in this State contain lessons on the Co-operative movement. The Government of India have been apprised of this position.

SRI A. VEDARATHNAM: இப்பொழுது சர்க்கார் ஹைஸ்கூலிலே பைபர் கேடெட் கோர்ஸ் கூட்டுறவு முறையிலே மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா? அவர்களுக்கு பிராக்டிகல் எக்ஸ்பீரியன்ஸ் உண்டாவதற்கு உயர்நிலைப்பள்ளிகளிலும் ஸ்டூடன்ஸ் கோவாப்ரேடிவ சொசைடி ஏற்படுத்தித் தர அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த ரிவைஸ்ட் சிலபஸ்லே 1-லிருந்து 7-வரையிலும் இண்டக்ரேடட் எலிமெண்டரி கோர்ஸ்ல் டீச்சிங் ஆப் கோவாப்ரேஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் மூன்றில் சோஷியல் ஸ்டடீஸ் ஏற்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் 4, 5, 6-ல் பாங்கிங், கோவாப்ரேஷன் இதைப்பற்றி சொல்லிக்கொடுக்கப்படுகிறது. ரிவைஸ்ட் முறையிலே இதைப்பற்றி சொல்லிக் கொடுக்கமுடியும்.

10th September 1960]

MR. SPEAKER: இன்று, கடைசிநாள். இன்னும் 14 கேள்விகள் இருக்கின்றன. அவைகளை, இன்னும் கூடுதல் 15 நிமிடங்கள் உட்கார்ந்து முடித்து விடலாம்.

SRI R. SRINIVASA IYER : Sir, we can extend the Question-Hour by half an hour instead of 15 minutes as there is very little business to transact to-day.

MR. SPEAKER : Suppose questions are finished within fifteen minutes. So, I will extend it in the first instance by 15 minutes. If questions are not finished within that time, then I will extend the time further.

Headquarters Hospital (Paramakudi)

* 609 *Q.*—SRI V. SUBBIAH (on behalf of SRI K. RAMACHANDRAN) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the present stage of the construction of the Headquarters Hospital at Paramakudi in Ramanathapuram district?

THE HON. SRI M. A. MANICKAVELU : Proposals for the acquisition of the lands required for the construction of the new buildings for the hospital have been called for from the Collector of Ramanathapuram.

SRI V. SUBBIAH: இம்மாதிரி ஒவ்வொரு தலைமை ஆஸ்பத்திரிக்கும் புது இடத்திற்கு எஸ்டிமேட் தயாரித்து வேண்டிய கட்டிடங்கள் ஆரம்பிக்காமல் இருக்கிறது. அவை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்.

THE HON. SRI M. A. MANICKAVELU: இது பரமக்குடி ஆஸ்பத்திரியைப் பற்றிய கேள்வி. இதில் சிறிது தாமதமான தற்குக் காரணம் அங்கு ஜாகை விஷயத்தில் எலெக்ட்ரிஸிட்டி கம்பெனிக்கும், போர்ட்டிற்கும் தகராறு இருந்தது. கடைசியில் அந்த தகராறு இடம் வேண்டாம், வேறு இடத்தில் கட்டலாம் என்று ஏற்பாடாகி இருக்கிறது.

SRI N. R. THIAGARAJAN: ராஜ்யத்திலுள்ள எல்லா தலைமை ஆஸ்பத்திரிகளையும் மாற்றியமைப்பதாக கேள்விப் பட்டேன். பரமக்குடியில் இன்னும் வேலை நடைபெறவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் தொகுதியாகிய சாத்தூரில்கூட அங்குள்ள தலைமை ஆஸ்பத்திரி பழைய காட்சியே அளிக்கிறது. ஆகவே எல்லாத் தலைமை ஆஸ்பத்திரிகளையும் மாற்றியமைத்து நல்ல கட்டிடங்களில் வைக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இருக்கிற காட்சியை வேறு விதமாக மாற்ற வேண்டும், அதற்கு கொஞ்ச காலம் வேண்டும். தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளை, ஏறக்குறைய ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரியில் எந்தளவு வசதி வேண்டுமோ அப்படிச் செய்ய திட்டம் போட்டு செய்துகொண்டு வருகிறோம். இதையெல்லாம் செய்து முடிக்க கொஞ்ச காலம் ஆகும். சில இடங்களில் இருக்கிற இடத்திலிருந்து மாற்றி வேறு